admin@dhinakani.com

தின கனி காலை நாளிதழ்

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-2272060 9443699066

நமது

# தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

காலை நாளிதழ்




மலர்:03 | இதழ்:244 | 4 பக்கங்கள் | 02:04:2026 | வியாழக்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தா ரூ,1825



மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

**விளக்கம்:**
நிலைபெற்ற உயிரை ஓம்பி அருளை ஆள்வானுக்குத் தன்னுயிரஞ்ச வரும் வினை வருவ தில்லையென்று சொல்லுவார். இது தீமை வாராதென்றது.

## ராகுல் காந்திக்கு தோல்விகளின் சதம் காத்திருக்கிறது: அசாமில் பிரதமர் மோடி பேச்சு



கோகாமுக்: அசாமில் 3-வது முறையாக தேசிய ஜனநாயக் கூட்டணி ஆட்சி அமையும் என்று நம்பிக்கை தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, காங்கிரஸ் கட்சியின் சுய பிரகடன இளவரசருக்கு தோல்விகளின் சதம் காத்திருக்கிறது என்று விமர்சித்தார்.அசாம் சட்டப்பேரவைத் தேர்தலை ஒட்டி கோகாமுக் பகுதியில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "முதலில் சர்பானந்த சோனாவால் தலைமையிலும் பின்னர் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமையிலும் அசாமில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த 10 ஆண்டுகால ஆட்சியில், அசாம் ஒரு புதிய சேவை மற்றும் நல்லாட்சிக்கான சகாப்தத்தைக் கண்டுள்ளது. வளர்ந்த இந்தியாவை கட்டமைக்க வளர்ந்த அசாமை உருவாக்குவதற்கான தேர்தல் இது. இம்முறையும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்று மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்கும் என்பது உறுதி. அதேபோல், காங்கிரஸ் கட்சிக்கும் மூன்றாவது முறையாக தோல்வி கிடைப்பது உறுதி. காங்கிரஸ் கட்சியின் சுய பிரகடன இளவரசருக்கு 100-வது தோல்வி காத்திருப்பதும் உறுதியாகிவிட்டது.அசாம் தேர்தல் அறிவிப்பு வெளியான பிறகு இதுவே எனது முதல் பொதுக்கூட்டம். இங்கு திரண்டுள்ள மக்கள் கடலே, நாங்கள் மூன்றாவது முறையாக வெற்றி பெற இருக்கிறோம் என்பதற்கான சான்று. உங்கள் ஆசியுடன் நான் மூன்றாவது முறையாக பிரதமரானேன். இந்த திடலுக்கு நான் வருகை தருவது இது மூன்றாவது முறை. உங்கள் ஆசியுடன் அசாமில் நாங்கள் மூன்றாவது முறை வெற்றி பெறுவோம்.பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 22 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் உறுதியான வீடுகளை பெற்றுள்ளன. இந்த திட்டத்தின் கீழ் வீடு கிடைக்காத குடும்பங்களுக்கு கண்டிப்பாக வீடு கட்டித்தரப்படும். பாஜக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகளின்படி, இத்திட்டத்தின் கீழ் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயனடையும். ஏழை குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு மழலையர் வகுப்பு முதல் பட்ட மேற்படிப்பு வரை இலவச கல்வி வழங்கப்படும்.

## திருத்தணி: அதிமுக செயல்வீரர்கள் கூட்டம்; வேட்பாளர் சிறப்புரை




திருவள்ளூர்மாவட்டம், திருத்தணிசட்டமன்றத்தொகுதிக்குட்பட்ட பொதட்டூர்பேட்டை பேரூராட்சியில் அதிமுக மற்றும் கூட்டணி கட்சியினருடன் செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இதில் அதிமுக வேட்பாளர் கோ.அரி சிறப்புரையாற்றினார். தமிழ் மாநில காங்கிரஸ் மாநில பொருளாளர் டாக்டர் இ.எஸ்.எஸ்.இராமன் ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் கூட்டணி கட்சி நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.

## களியக்காவிளை: மது கடத்திய ஆட்டோ ஓட்டுனர் கைது



களியக்காவிளை போலீசார் நேற்று பேருந்து நிலையத்தில் சோதனை நடத்தியபோது, ஆட்டோவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 26 பாட்டில் மதுபானங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மதுபானங்களை பறிமுதல் செய்த போலீசார், கேரளா மாநிலம் பாறசாலை, இஞ்சி விளை பகுதியைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் ஷமீர் (39) என்பவரைக் கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## திமுகவின் ரூ.6 லட்சம் கோடி ஊழல் குறித்து விசாரிக்கப்படும்: பாமக தேர்தல் அறிக்கையை வெளியிட்டு அன்புமணி உறுதி



திமுக ஆட்சியில் நடைபெற்றிருப்பதாகச் சொல்லப்படும் ரூ.6 லட்சம் கோடி ஊழல் குறித்து தனித் தனியாக வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தப்படும் என பாமக தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டப்பேரவை தேர்தலுக்கான பாமக-வின் தேர்தல் அறிக்கையை சென்னை தியாகராய நகரில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் அன்புமணி நேற்று வெளியிட்டார். அப்போது, அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:திமுக ஆட்சியில் மணல் கொள்ளை, கனிமவளக் கொள்ளை, பணியாளர் நியமன ஊழல், ஒப்பந்த ஊழல், பணியிட மாற்ற ஊழல், மது வணிகத்தில் வரி ஏய்ப்பு என ரூ.6 லட்சம் கோடி அளவுக்கு ஊழல்கள்நடைபெற்றிருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், அவை குறித்து தனித்தனியாக வழக்கு பதிவு செய்து விசாரிக்கப்படும். அமைச்சர்கள், அதிகாரிகள் மீதான வழக்குகளை விசாரிப்பதற்காக சென்னையில் 3 சிறப்பு நீதிமன்றங்களும், மதுரை மற்றும் கோவையில் தலா ஒரு சிறப்பு நீதிமன்றமும் அமைக்கப்படும். 5 லட்சம் பேருக்கு அரசு வேலை, தனியார் துறை, சுயவேலைவாய்ப்புகள் மூலம் அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு கோடி பேருக்கு வேலை வழங்கப்படும். முழு மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்படும். கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்களின் நடமாட்டத்தை ஒழிக்க கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற குறுகிய கால மற்றும் மத்திய கால பயிர்கடன்கள், பொதுத்துறை வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய ரூ.1 லட்சம் வரையிலான பயிர் கடன்கள் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும். மழலையர் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை அனைவருக்கும் இலவசக் கல்வி வழங்கப்படும். தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கான கல்வி கட்டணத்தை அரசே செலுத்தும். 10, 12-ம் வகுப்புப் பொதுத் தேர்வுகள் ஆண்டுக்கு இருமுறை நடத்தப்படும். அரசு கலை அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள் ஆகியவற்றில் அனைவருக்கும் பட்டப்படிப்பு கட்டணமின்றி வழங்கப்படும். நீட் நுழைவுத் தேர்வில் இருந்து தமிழகத்திலுள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு மட்டும் விலக்கு பெறப்படும். சென்னையில் செயற்கை அறிவுத்திறன் பல்கலைக்கழகம், கோவையில் திறன் பல்கலைக்கழகம் தொடங்கப்படும். காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், மயிலாடுதுறை, பெரம்பலூர், தென்காசி ஆகிய 6 மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும். கடலூர் மாவட்டத்தின் இரண்டாவது அரசு மருத்துவக் கல்லூரி கடலூரில் அமைக்கப்படும். தமிழகத்தில் அனைத்து மருத்துவமனைகளிலும் உலகத்தரம் வாய்ந்த மருத்துவ சிகிச்சை இலவசமாக வழங்கப்படும். மாநில அரசின் சார்பில் சமூகநீதி மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு) நடத்தப்படும். இதுவரை வளர்ச்சி அடையாத அனைத்து சமுதாயங்களுக்கும் உரிய இட ஒதுக்கீடு கிடைக்க வழி வகை செய்யப்படும். குடும்ப தலைவிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மாத உரிமைத் தொகை ரூ.2 ஆயிரமாக உயர்த்தப்படும். ஏழை தொழிலாளர்களின் நலன் கருதி, ரூ.10-க்கு சோறு, சாம்பார், ரசம், தயிர், கூட்டு, பொரியல், ஊறுகாயுடன் நிறைவான மதிய உணவு வழங்கப்படும். ஞாயிற்றுக் கிழமைகளில் ரூ.25-க்கு அசைவ மதிய உணவு வழங்கப்படும். அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும்.கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும். மூத்த குடிமக்கள் ஓய்வூதியம் ரூ.2,000 ஆக உயர்த்தப்படும். பேருந்துக் கட்டணம் உயராது. மின் கட்டணம் குறைக்கப்படும். அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ - மாணவியருக்கு மாலையில் பள்ளி முடிந்து வீடு திரும்பும்போது சிற்றுண்டி வழங்கப்படும். தமிழகத்தில் அனைத்து மணல் குவாரிகளும் மூடப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி தாராபுரம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிமனை அலுவலக பூமி பூஜை நடைபெற்றது



திருப்பூர்: **ஏப்,02**

மாவட்டம் தாராபுரம் தனித் தொகுதியில் அஇஅதிமுக கழக செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் ஆலோசனையின்படி, அதிமுக தலைமை கழக செயலாளர் எஸ்.பி. வேலுமணியின் அறிவுறுத்தலின்படி, இன்று காலை 11 மணி அளவில் தாராபுரம் அமராவதி சிலை அருகே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி தாராபுரம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிமனை அலுவலக பூமி பூஜை நடைபெற்றது. இதில் அதிமுக மாவட்ட இணை செயலாளர் திருமதி. சத்தியபாமா தலைமையில், **ஏப்,02** திருப்பூர் புறநகர் மாவட்ட செயலாளரும் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினருமான மகேந்திரன் முன்னிலையிலும், நகர செயலாளர் ராஜேந்திரன், நகர துணைச் செயலாளர் நாட்ராயன், ஒன்றிய செயலாளர்கள் ரமேஷ், பாலகுமாரன், செந்தில் குமார், செல்வகுமார், மாவட்ட பொருளாளர் பழனிச்சாமி, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுநர் அணி செயலாளர் பங்கு மகேஷ், இளைஞர் பாசறை, மகளிர் அணியினர், தகவல் தொழில்நுட்பு பிரிவினர் மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியை சேர்ந்த பாஜக, பாமக, தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், தமிழ் மாநில காங்கிரஸ் மற்றும் 300க்கும் மேற்பட்டவர்கள் பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## காங்கேயம் திமுக தேர்தல் பணிமனை திறப்பு: அமைச்சர் பங்கேற்பு



திருப்பூர்: **ஏப்,02**

மாவட்டம், காங்கேயம் சட்டமன்றத் தொகுதியில் தேர்தல் பணிமனை திறப்பு விழா நடைபெற்றது. மாவட்ட கழகச் செயலாளர் இல. பத்மநாபன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், செய்தித் துறைஅமைச்சர்மு.பெ.சாமிநாதன்மற்றும்மனிதவளமேலாண்மைத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மதச்சார்பற்ற கூட்டணி கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டனர். கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், திமுக சார்பு அணியினர் மற்றும் பொதுமக்கள் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

## குமரி: 2 டன் ரேசன் அரிசியை போலீசார் காருடன் பறிமுதல்



களியக்காவிளை சோதனை சாவடியில் நேற்று போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, காரில் இருந்து 2 டன் ரேசன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது. ரேசன் அரிசியை கேரளாவிற்கு கடத்த முயன்றது தெரியவந்தது. இதனையடுத்து, கடத்தல் காரையும், ரேசன் அரிசியையும் உணவு கடத்தல் தடுப்பு போலீசாரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் அரிசியை காப்புக்காடு அரசு நுகர்வோர் வணிப கிடங்கிலும், வாகனத்தை தாலுகா அலுவலகத்திலும் ஒப்படைத்தனர்.

## சிறுமிக்கு நவீன கருவியை பொருத்தி மறுவாழ்வு: ராஜீவ்காந்தி மருத்துவமனை மருத்துவர்கள் தகவல்



சென்னை: சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை டீன் சாந்தாராமன், மருத்துவ கண்காணிப்பாளர் பாஸ்கரன் ஆகியோர் கூறியதாவது: கடலூரை சேர்ந்த ஏழை தம்பதியின் மகள் 14 வயது சிறுமிக்கு கடந்த 2 ஆண்டுகளாக கட்டுப்பாடின்றி சிறுநீர் வெளியேறும் பாதிப்பு இருந்து வந்தது. பல்வேறு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும், அந்த பிரச்சினை சரியாகவில்லை. இந்நிலையில், மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனைக்கு அந்த சிறுமி அழைத்து செல்லப்பட்டார். அங்கு சிறுமியை பரிசோதனை செய்த மருத்துவர்கள், சிறுமிக்கு நியூரோ ஜெனிக் ப்ளேடர் எனப்படும் சிறுநீர்ப் பை செயலிழப்பு பாதிப்பு இருந்ததை கண்டுபிடித்தனர். நரம்பு மண்டலங்களில் ஏற்படும் சேதத்தால் இந்த பிரச்சினை ஏற்படுகிறது. நரம்புகளை முடுக்கி விடும் நியூரோ மாடுலேஷன் தெரபி சிகிச்சை தான் இதற்கு ஒரே தீர்வு ஆகும். இதய துடிப்பை சீராக்க பேஸ் மேக்கர் பொருத்துவதை போன்று, நரம்புகளின் செயல்பாட்டை சீராக்க நியூரோ மாடுலேஷன் சாதனத்தை அறுவை சிகிச்சை மூலம் பொருத்த வேண்டும். இதற்கு அந்த தனியார் மருத்துவமனையில் ரூ.25 லட்சம் செலவாகும் என்று தெரிவித்துள்ளனர். ஏழ்மை நிலையில் இருக்கும் பெற்றோரிடம் அவ்வளவு பணம் இல்லை. அதனால், சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக சிறுமி அனுமதிக்கப்பட்டார். இதையடுத்து, சிறுமியிக்கு முதல்கட்ட அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மருத்துவர்கள் மேற்கொண்டனர்.15 ஆண்டுகள் செயல்படும்தொடர்ந்து, ரூ.7.5 லட்சம் மதிப்பிலான மின் முடுக்கி உபகரணம் சிறுமியின் உடலில் பொருத்தப்பட்டது. 15 ஆண்டுகள் செயல்படும் அந்த கருவி மற்றும் அதற்கான சிகிச்சை செலவை அரசு ஏற்று கொண்டது.தற்போது சிறுமி நலமுடன் உள்ளார். மகளை காப்பாற்றிய மருத்துவர்களுக்கு பெற்றோர் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தனர். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.




திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியின் பொது பார்வையாளர் உயர்திரு. ரவிக்குமார் சர்பர், திருவண்ணாமலை திண்டிவனம் சாலை சந்திப்பு, ஏந்தல் சாலை சந்திப்பு, தென்மாத்தூர் ஆகிய இடங்களில் தேர்தல் பறக்கும் படையினர் பணிகளை இரவு 10:30 மணி முதல் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வட்டாட்சியர் திருவண்ணாமலை உடன் இருந்தார்.

### குன்னம் தொகுதி செந்துறையில் திமுக தலைமையிலான

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் வேட்பாளர் சா.சி.சிவசங்கர் அவர்களின் அறிமுக கூட்டம்

*அரியலூர்*

பெரம்பலூர் அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி செந்துறை ஒன்றியத்தில் திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், மீண்டும் குன்னம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட திமுகவின் வேட்பாளராக, தமிழ்நாடு முதலமைச்சர்,திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அரியலூர் மாவட்ட செயலாளர் அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்களை அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து வேட்பாளர் அறிமுக கூட்டம் செந்துறையில் நடைபெற்றது. அப்பொழுது தொண்டர்களுக்கு வேட்பாளர், அமைச்சர் தெரிவித்ததாவது; 05 ஆண்டுகளைக் கடந்து 2026 ஏப்ரல் 23 ஆம் தேதி தேர்தல் களமாக இருந்தாலும் சுற்றிச் சுழன்று பணியாற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள் செந்துறை ஒன்றிய செயல் வீரர்கள் செந்துறையில் நேரில் சந்தித்து தேர்தல் பணி முன்னெடுப்பு செய்ய உற்சாகப்படுத்திய அவர்களின் கீழ் தேர்தல் களம் பணியாற்ற செந்துறை தெற்கு ஒன்றிய



செயலாளர் செல்வராஜ், வடக்கு ஒன்றிய செயலாளர் எழில்மாறன், மேற்கு ஒன்றிய செயலாளர் வழக்கறிஞர் செல்வம் ஆகியோர் தலைமையில் வெயிலோ மழையோ எதையும் பொருட்படுத்தாது திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றி ஒன்றையே இலக்காகக் கொண்டு அயராது உழைக்கும் தோழர்களுக்கு, நமது திமுக பேரியக்கத்தின் இருவண்ணமான கருப்பு சிவப்பு துண்டு அணிவித்து எனது அன்பையும் நெஞ்சார்ந்த நன்றியையும் வெளிப்படுத்தினார் அமைச்சர். திமுக உடன்பிறப்புகளின் இந்த வற்றாத ஊக்கமும், ஒருங்கிணைந்த களப்பணியும் குன்னம் தொகுதியில் மீண்டும் நமது வெற்றி முரசை எத்திசையும் ஒலிக்கச் செய்ய வேண்டும் என உறுதிபடுத்தும் வகையில் கூட்டணி கட்சியினர், திமுக தொண்டர்களையும் கேட்டுக்கொண்டு தன்னை அறிமுகப்படுத்தி உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க பணியாற்றுங்கள் என கூறினார். முன்னதாக செந்துறை பேருந்து நிலையத்தில் உள்ள பெரியார் திருவுருவ சிலை, காவல் நிலையம் அருகில் உள்ள காமராஜர் திருவுருவ சிலை , அம்பேத்கர் திருவுருவ சிலை ஆகியோரின் பெரும் தலைவர்களுக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்தார்

### காட்பாடி அடுத்த பொண்ணை பகுதியில்

## தேர்தல் பிரச்சாரத்திற்காக சென்ற துரைமுருகன் வாகனத்தை சோதனை செய்த தேர்தல் அதிகாரிகள்

*காட்பாடி*

தமிழக சட்டமன்ற பொது தேர்தல் ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெறும் என இந்திய தலைமை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள நிலையில் தற்போது தேர்தல் விதிமுறைகள் நடைமுறைக்கு வந்துள்ளது. இதனிடையே காட்பாடி தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் மூன்று பறக்கும் படையினர் மற்றும் நிலையான கண்காணிப்பு குழுவினர் தீவிர வாகன தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது தேர்தல் வேட்பாளர்கள் அறிவித்த நிலையில் காட்பாடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொன்னை பகுதியில் உள்ள ஒட்டனேரி தனது முதல் கட்ட பிரச்சாரத்தை



அமைச்சர் துரைமுருகன் முதல் கட்ட பிரச்சாரத்தை துவக்க காட்பாடியில் உள்ள இல்லத்திலிருந்து புறப்பட்டு சென்ற பொழுது பொன்னை மேம்பாலம் பகுதியில் கண்ணியம்பாடி துணை வட்டார வளர்ச்சி அலுவலர் சதீஷ்குமார் மற்றும் காவலர்கள் சிவக்குமார், ஹேமலதா ஆகியோர் துரைமுருகன் பயணித்த கார் மற்றும் பின் தொடர்ந்து வந்த இரண்டு காரை மறைத்து சோதனை மேற்கொண்டனர். இதனால் சிறிது நேரம் அப்பகுதியில் பரபரப்பான சூழல் காணப்பட்டது.

## எலாவூரில் கும்மிடிப்பூண்டி தொகுதி அதிமுக வேட்பாளர் வி.சுதாகர் அறிமுக கூட்டம்

*திருவள்ளூர்*

திருவள்ளூர் வடக்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி அதிமுக வேட்பாளராக வி. சுதாகர் நியமிக்கப்பட்டார். இதனையடுத்து வேட்பாளர் அறிமுக கூட்டம் கும்மிடிப்பூண்டி அடுத்த பகுதியில் எலாவூர்உள்ள பாலாஜி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு கும்மிடிப்பூண்டி அதிமுக கிழக்கு ஒன்றிய செயலாளர் சுண்ணாம்பு குளம் எஸ் எம் ஸ்ரீதர் வரவேற்புரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும் முன்னாள் பொன்னேரி தொகுதி எம்எல்ஏ வுமான சிறுனியம் பி பலராமன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் அதிமுக வேட்பாளர் வி சுதாகர், முன்னாள் எம்எல்ஏ கே எஸ் விஜயகுமார், பாட்டாளி



மக்கள் கட்சி மாநில முன்னாள் துணைப் பொதுச் செயலாளரும் முன்னாள் புது கும்மிடிப்பூண்டி ஊராட்சி மன்ற தலைவருமான எம் செல்வராஜ், மாவட்ட செயலாளர் எம் பிரகாஷ், அதிமுக தெற்கு ஒன்றிய செயலாளர் டி சி மகேந்திரன், அதிமுக மாவட்ட துணை செயலாளர் சியாமளா தன்ராஜ் அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர்இமயம் மனோஜ், அதிமுக சிறுபான்மை பிரிவு மாவட்ட செயலாளர் சிராஜுதீன், அதிமுக இளைஞர் இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் சேதுபதி, அதிமுக நகர செயலாளர் எஸ் டி டி ரவி, பாஜக மாவட்ட தலைவர் சுந்தரம், பாஜக மாநில நிர்வாகி பாஸ்கரன், பாஜக மாவட்ட செயலாளர் கும்மிடிப்பூண்டி எம்.மாரிமுத்து, தமாக மாவட்ட தலைவர் கும்மிடிப்பூண்டி சேகர், மற்றும் புரட்சி பாரதம், பகுஜன்சமாஜ் கட்சி, ஐ ஜே கே கட்சி உள்ளிட்ட இந்திய ஜனநாயக தேசிய கூட்டணி கட்சிகளை சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் கும்மிடிப்பூண்டி அதிமுக மேற்கு ஒன்றிய செயலாளர் பலவாடா ஜே. ரமேஷ் குமார் நன்றி கூறினார்

## 100% வாக்களிப்போம் என் வாக்கு எனது உரிமை என்ற தலைப்பில் விழிப்புணர்வு




காட்பாடி தாராபடவேடு 1வது மண்டல அலுவலகத்தில் உதவி ஆணையர் பாலமுருகன் தலைமையில் 100% வாக்களிப்போம் என் வாக்கு எனது உரிமை என்ற தலைப்பில் விழிப்புணர்வு வழங்கப்பட்டது, சுகாதார அலுவலர் சிவக்குமார் பொன் முருகன் மண்டல துணை வட்டாட்சியர் காட்பாடி, சுஜாதா ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் காட்பாடி, மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

### திருமானூர் ஊராட்சியில்

## தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா 100% வாக்களிப்பது அவசியம் குறித்து விழிப்புணர்வு

*அரியலூர்*

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026, அரியலூர் மாவட்டத்தில் அரியலூர், ஜெயங்கொண்டம் ஆகிய இரண்டு சட்டமன்ற தொகுதிகளில் முந்தைய சட்டமன்ற தேர்தல்களில் வாக்கு சதவீதம் குறைந்த பகுதிகளில் 100 கதவீதம் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தியும் 80 வயதிற்கு மேற்பட்டோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் வீட்டிலிருந்தே தபால் வாக்கு செலுத்துவது தொடர்பான விவரங்களையும் மாவட்டத்திற்குட்பட்ட முதல் நிலை வாக்காளர்கள் நூறு சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தியும் அரியலூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதி நவீன மின்னணு எல் இ டி விளம்பர திரை வாகனம் மூலம் குறும்படங்கள் ஒளிபரப்பு செய்யப்பட்டது இதில்



அனைவரும் வாக்களிப்போம், 100சதவீதம் தவறாமல் வாக்களிப்போம், தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா சிவிஜில் ஆப்பில் தேர்தல் விதிமீறல் குறித்த புகார் செய்வது தொடர்பான விளக்கம், மற்றும் எனது வாக்கு எனது இந்தியா வாக்குச்சாவடி அமைவிடம் வாக்காளர் பட்டியலில் பெயர் விவரம் தொடர்பான சந்தேகங்களுக்கு 1950 என்ற இலவச தொலைபேசி எண் மூலமாக தெரிந்து கொள்வது,வாக்களிப்பது நமது கடமை மட்டுமல்ல நமது ஜனநாயக உரிமை ,போன்ற குறும்படங்கள் திருமானூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ஒளிபரப்பப்பட்டன இந்த விழிப்புணர்வு குறும்படங்களை ஏராளமார் பார்வையிட்டு தெரிந்து கொண்டளர்,

## ஈரோடு மேற்கு தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் முத்துசாமி வீடு வீடாக தேர்தல் பிரச்சாரம்

*ஈரோடு*

வீட்டு வசதி துறை அமைச்சர் முத்துசாமி வீடு வீடாக நேரில் சென்று வாக்குகள் சேகரித்தார் நேற்று காலை ஜெகநாதபுரம் காலனியில் துவக்கி குமாரமங்கலம் வீதி, வஉசி வீதி, அம்பேத்கர் வீதி, வள்ளியம்மாள் வீதி, காமராஜர் வீதி, கண்ணகி வீதி, கோவலன் வீதி மற்றும் டீச்சர்ஸ் காலனி ஆகிய அனைத்து பகுதிகளிலும் நடந்தே சென்று வாக்குகள் சேகரித்தார்




## திருக்கோவலூர் அருகே 19ஆம் நூற்றாண்டு கல்வெட்டு கண்டுபிடிப்பு

*திருக்கோவிலூர்*

திருக்கோவிலூர் அடுத்த சந்தப்பேட்டையில் , சங்கராபுரம் சாலையில் உள்ள கெங்கையம்மன் கோவிலில் 19 ஆம் நூற்றாண்டு பலகைக் கல்வெட்டினை கள்ளக்குறிச்சி மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் தலைவரும் கல்வெட்டு ஆய்வாளருமான சிங்கார உதியன் தலைமையில், சிறப்புத்தலைவர் விழுப்பும் வீரராகவன், பா.கார்த்திகேயன் சு. சங்கர் ஆகியோர்கண்டுபிடித்து ஆய்வு செய்தனர். இப் பலகைக் கல்வெட்டில் மொத்தம் 7 வரிகள் வெட்டப்பட்டுள்ளது. இது 19



ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. பலகைக் கல்வெட்டில் உள்ள கல்வெட்டு வாசகம் 1. பிரமாதி ச ஆ 2. வணி மா வானி 3. சிங் வைத்தா 4. ஆல்( ) பின் 5. னம் செய்தா 6. ல் வம்சம் 7. கெடும். என்றுள்ளது. இடையில் ஒரு குறியீடு உள்ளது, இது பின்னத்தைக் குறிக்கும் குறியீடாக இருக்கலாம். ) வானிசிங் என்பவர் கட்டிய கோவிலாகவோ, அல்லது ஏதே ஒரு செயல் செய்திருக்கலாம். இதனை சிதைப்பவர்களின் வம்சம் அழிந்து போகும் என்கிறது . இக்கல்வெட்டு பிரமாதி வருஷம், ஆவனி மாதத்தில் வெட்டப்பட்டுள்ளது.



திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ், இ.ஆ.ப., அவர்கள் ஆரணி வட்டம், தச்சூர் அரசு பொறியியல் கல்லூரியில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெவுள்ளதை முன்னிட்டு வாக்கு எண்ணும் மையத்தில் முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

# ஜீன் மாதம் வரை தகிக்கும் வெயில் வெப்ப நிலை 100 டிகிரியைத் தாண்டும்!

## தமிழகத்தில் 'ஹீட் வேவ்' எச்சரிக்கை

சென்னை, ஏப். 2

தமிழகத்தில் இந்த ஆண்டு கோடை வெயிலின் தாக்கம் வழக்கத்தை விடகடுமையாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, ஏப்ரல் 10ம் தேதிக்குப் பிறகு வெப்பத்தின் வீச்சு பல மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது. ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான மூன்று மாதங்களில், தமிழகத்தின் பெரும் பாலான மாவட்டங்களில் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பை விட அதிகமாகவே இருக்கும்.

இதனால் பகல் நேரத்தில் மட்டுமின்றி, இரவு நேரத்திலும் புழுக்கம் அதிகமாக இருக்கும். வட தமிழகக் கடலோர மாவட்டங்கள், சென்னை மற்றும் உள் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் 'வெப்ப அலை' வீசும் நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். பொதுவாக ஏப்ரலில் 2ம் தேதி முதல் 3 நாட்கள் நிலவும் வெப்ப அலை, இந்த ஆண்டு 4 முதல் 6 நாட்கள் வரை நீடிக்க வாய்ப்புள்ளது. ஏற்கனவே ஈரோடு, கரூர் பரமத்தி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வெயில் 100 டிகிரி பாரன்ஹீட்டை (38) கடந்து பதிவாகி வருகிறது.

வரும் நாட்களில் வேலூர், திருத்தணி போன்ற பகுதிகளிலும் வெயில் சுட்டெரிக்கும். வெப்பம் ஒருபுறம் வாட்டி வதைத்தாலும், வளிமண்டலக் கீழடுக்குச் சுழற்சி காரணமாகத் தமிழகத்தின் தென் மாவட்டங்கள் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய பகுதிகளில் ஏப்ரல் மாதத்தில் அவ்வப்போது கோடை மழை பெய்யக்கூடும். இது தற்காலிக நிம்மதியைத் தந்தாலும், ஒட்டுமொத்த வெப்ப அழுத்தத்தில் பெரிய மாற்றம் இருக்காது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகச் சட்டமன்றத் தேர்தல் பிரசாரம் உச்ச கட்டத்தில் உள்ள நிலையில், அரசியல் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் மதிய நேரங்களில் (மதியம் 12 மணி முதல் 3 மணி வரை) நீண்ட நேரம் வெயிலில் இருப்பதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

# நுரையீரல் தொற்று காரணமாக ஐசியூவில் இயக்குநர் பாரதிராஜா

சென்னை, ஏப்.2

கடந்த சில நாட்களாக வயது முதிர்வு மற்றும் உடல்நலப் பாதிப்புகளால் ஓய்வில் இருந்த இயக்குநர் பாரதிராஜாவுக்கு, திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டதையடுத்து அவர் சென்னையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

மருத்துவமனை வட்டாரங்கள் மற்றும் குடும்பத்தினர் தரப்பிலிருந்து கிடைத்துள்ள தகவல்களின்படி, அவருக்குக் கடுமையான நுரையீரல் தொற்று ஏற்பட்டுள்ளதாகவும், அதன் காரணமாகவே மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. தற்போது அவர் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, மருத்துவர்களின் 24 மணி நேரத் தீவிர கண்காணிப்பில் உள்ளார். அவருக்குச் செயற்கை சுவாசக் கருவிகள் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

மருத்துவமனை படுக்கையில் பாரதிராஜா மிகவும் சோர்வாக இருக்கும் புகைப்படம் ஒன்று இன்று காலை முதல் சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது. இதைப் பார்த்த ரசிகர்கள், "எங்கள் இமயம் மீண்டு வர வேண்டும்" என உருக்கமாகப் பதிவிட்டு வருகின்றனர். 'மண்வாசனை' மாறாத படங்களைக் கொடுத்த கலைஞர் விரைவில் குணமடைய வேண்டி பிரார்த்தனை செய்து வருகின்றனர். பாரதிராஜா அனுமதிக்கப்பட்டுள்ள செய்தி அறிந்தவுடன், இயக்குநர்கள் மணிரத்னம், பாக்கியராஜ் மற்றும் நடிகர்கள் உள்ளிட்ட பல திரையுலகப் பிரபலங்கள் மருத்துவமனைக்குச் சென்று அவரது உடல் நிலை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர்.

தமிழக அரசியல் தலைவர்கள் பலரும் பாரதிராஜாவின் தம்பியிடம் தொலைபேசி வாயிலாக நலம் விசாரித்து வருகின்றனர். வதந்திகளை நம்ப வேண்டாம் என்றும், பாரதிராஜாவின் உடல்நிலை சிகிச்சைக்கு நல்ல முறையில் ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும் அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

# பழனியில் பங்குனி உத்திரத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம்



பழனி, ஏப். 2

பழனியில் பங்குனி உத்திரத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் வடம் பிடித்து திருத்தேரை இழுத்து முருகனை வழிபட்டனர்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோவிலில் கடந்த 26ம்தேதி பங்குனி உத்திரத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது. பத்து நாட்கள் நடைபெறும் திருவிழாவை முன்னிட்டு லட்சக்கணக்கான பக்தர்கள் கொடுமுடி காவிரி ஆற்றில் இருந்து தீர்த்தம் முத்தரித்து பாதயாத்திரையாக வந்து பழனிமுருகனுக்கு அபிஷேகம் செய்து வழிபட்டு வருகின்றனர். பங்குனி உத்திரத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான திருக்கல்யாணம் மற்றும் வெள்ளித் தேரோட்டம் நேற்று நடைபெற்றது. புகழ்பெற்ற பங்குனித் தேரோட்டம் இன்று மாலை நடைபெற்றது. பழனி அடிவாரம் கிரிவீதியில் நின்ற தேரில் அருள்மிகு முத்துக்குமாரசாமி வள்ளி, தெய்வானை சமேதராக தேரேற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து அருள்மிகு முத்துக்குமாரசாமிவள்ளி தெய்வானை சமேதராக எழுந்தருளி நான்கு கிரி வீதிகளிலும் தேர்பவனி வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் தேரை வடம்பிடித்து இழுத்து சுவாமியை வழிபட்டனர். தேரோட்டத்தில் பழனி கோவில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள், இணை ஆணையர் மாரிமுத்து மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். வருகிற 4ம்தேதி சனிக்கிழமை அன்று கொடியிறக்கத்துடன் பங்குனி உத்திரத் திருவிழா நிறைவடைகிறது.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் திருநெல்வேலி டூ திருமங்கலம் வரை 33 தொகுதிகளில் 3 நாள் பிரச்சாரம்

சென்னை, ஏப். 2

தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளம், மேற்கு வங்கம், அசாம் ஆகிய 5 மாநில தேர்தல் இந்த மாதம் (ஏப்ரல்) நடைபெறுகிறது.

அதன்படி தமிழ்நாட்டில் ஏப்ரல் 23ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் நிலையில், மே 4ம் தேதி வாக்கு எண்ணப்படுகிறது.

இதற்கான வேட்பு மனுத்தாக்கல் கடந்த மார்ச் 30ம் தேதி தொடங்கி, ஏப்ரல் 6ம் தேதியோடு நிறைவடைகிறது. தேர்தல் களம் தற்போது சூடுபிடித்துள்ள நிலையில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கூட்டணியில் உள்ள அனைத்து கட்சிகளுக்கும் தொகுதிகள் ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகள் நிறைவடைந்துள்ளன.

இதில் திமுக 164 தொகுதிகளில் நேரடியாகவும், திமுக சின்னமான உதயசூரியன் சின்னத்தில் கூட்டணிக் கட்சிகள் 11 தொகுதிகளிலும் என மொத்தம் 175 தொகுதிகளில் களமிறங்குகிறது.

மேலும் 59 தொகுதிகள் கூட்டணி கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், தற்போது தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பிரச்சாரம் பொதுக்கூட்டத்தில் பங்கேற்று வாக்கு சேகரித்து வருகிறார். அதன்படி நேற்று முன்தினம் (மார்ச் 31) திருவாரூரில் தனது முதற்கட்ட பிரச்சாரத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கினார். தொடர்ந்து நேற்று (ஏப்ரல் 1) காலை திருச்சியிலும், மாலை கரூரிலும் வேட்பாளர்களுக்காக முதலமைச்சர் வாக்கு சேகரிப்பில் ஈடுபடுகிறார்.

இதைத் தொடர்ந்து இன்று (ஏப்.2) காலை ஈரோட்டிலும், மாலை கோவையிலும் திமுக மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சார பொதுக்கூட்டத்தில் பங்கேற்கிறார். இந்த நிலையில், முதலமைச்சரின் அடுத்த மூன்று நாள் (ஏப். 3 முதல் 5 வரை) இரண்டாம் கட்ட பிரச்சார பொதுக்கூட்ட அட்டவணையை திமுக தலைமைக் கழகம் வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு

ஏப்ரல் 3, மாலை 5 மணிக்கு திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ராதாபுரம் ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளில் கழகத்தின் சார்பிலும், கூட்டணி கட்சிகளின் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடுகிறார். ஏப்ரல் 4, காலை 9 மணிக்கு கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் கழகத்தின் சார்பிலும்,

கூட்டணி கட்சிகளின் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடுகிறார். அதே நாள் மாலை 5 மணிக்கு... தென்காசி மாவட்டம் சங்கரன் கோவிலில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தென்காசி, சங்கரன் கோவில், கடையநல்லூர், ஆலங்குளம் வாசுதேவநல்லூர் ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளில் கழகத்தின் சார்பிலும், கூட்டணி கட்சிகளின் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடுகிறார். ஏப்ரல் 5, காலை 9 மணிக்கு விருதுநகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் ஆகிய 7 சட்டமன்ற தொகுதிகளில் கழகத்தின் சார்பிலும், கூட்டணி கட்சிகளின் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடுகிறார்.

அதே நாள் மாலை 5 மணிக்கு... மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் மேலூர், மதுரை கிழக்கு, மதுரை மேற்கு, மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, சோழவந்தான், திருப்பரங்குன்றம், உசிலம்பட்டி, திருமங்கலம் ஆகிய 10 சட்டமன்ற தொகுதிகளில் கழகத்தின் சார்பிலும், கூட்டணி கட்சிகளின் சார்பிலும் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடுகிறார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல்2026 முன்னிட்டு திருப்பூர் தெற்கு மற்றும் பல்லடம் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொதுபார்வையாளர் தர்மேந்திர சிங் திருப்பூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊடக சான்றளிப்பு மற்றும் கண்காணிப்பு குழு மையத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செ.கு.சதீஸ்குமார் உள்ளார்.

# இன்று திருச்சியில் விஜய் மனுத்தாக்கல் பிரச்சாரத்திற்கு காவல்துறை அனுமதி

திருச்சி, ஏப். 2

சென்னை பெரம்பூர் தொகுதியில் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்த விஜய்,

அதனைத் தொடர்ந்து அந்தத் தொகுதியில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். பெரம்பூரைத் தொடர்ந்து, தனது அடுத்த கட்டமாக இன்று (ஏப்.2ல்) திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளார்.

மனுத் தாக்கலைத் தொடர்ந்து திருச்சியில் அவர் பிரம்மாண்ட பிரச்சாரத்தில் ஈடுபடவும் திட்டமிட்டுள்ளார். விஜய்யின் திருச்சி பிரச்சாரத்திற்காகப் பாதுகாப்பு மற்றும் அனுமதி கோரி திருச்சி மாநகர காவல் ஆணையரிடம் தவெக சார்பில் மனு அளிக்கப்பட்டிருந்தது.



பெரம்பூர் பிரச்சாரத்தில் பாதுகாப்பு குறைபாடுகள் இருப்பதாகப் புகார் எழுந்த நிலையில், தற்போது திருச்சி பிரச்சாரத்திற்கு மாநகர காவல்துறை அதிகாரப் பூர்வமாக அனுமதி வழங்கியுள்ளது.

2026 தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான முக்கிய தேதிகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவு நாள்: ஏப்ரல் 23, 2026, வாக்கு எண்ணிக்கை:

மே 4, 2026, திருச்சியில் காவல்துறையின் அனுமதி கிடைத்துள்ளதால், தமிழக வெற்றிக் கழகத் தொண்டர்கள் மிகுந்த உற்சாகத்துடன் பிரச்சார ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.




தமிழ்நாட்டில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது இந்த கோடை வெயிலின் தாக்கத்தை தணிக்கும் வகையில் கோவை நஞ்சப்பா சாலையில் உள்ள செல்வம் ஏஜென்சீஸ் மற்றும் அம்பாள் அறக்கட்டளை சார்பில் செல்வம் ஏஜென்சீஸ் நிர்வாக இயக்குனர் நந்தகுமார்,தலைமைச் செயல் அதிகாரி அனிஸ் பிரஜ்வின் ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தனர்.உடன் பொது மேலாளர் சாமியப்பன்,மேலாளர் சாமிநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.மேலும் மூன்றாம் ஆண்டு துவக்க விழா என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹார்மூஸ் நீரிணையை கைப்பற்ற களமிறங்கிய 35 நாடுகள்

லண்டன், ஏப். 2

ஹார்முஸ் நீரிணையில் நிலவும் பதற்றத்தை தணித்து, கடல்சார் பாதுகாப்பை மீட்டெடுக்க பிரிட்டன் பிரதமர் கீர் ஸ்டார்மர் தலைமையில் 35 நாடுகள் ஒன்றிணைந்துள்ளன. இதற்காக லண்டனில் சர்வதேச அளவிலான தூதரக மாநாடு நடைபெறவுள்ளது.

எண்ணெய் போக்குவரத்திற்கு மிக முக்கியமான இந்த பாதையில் கப்பல்களின் சுதந்திரமான நடமாட்டத்தை உறுதி செய்ய பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், போரில் தங்களுக்கு உதவாத நாடுகளை கடுமையாக விமர்சித்து வரும் சூழலில் இந்த தூதரக நகர்வு முக்கியத்துவம் பெறுகிறது. ஈரானுக்கு எதிரான தாக்குதலில் பிரிட்டன் நேரடியாக பங்கேற்காததை கண்டித்த ட்ரம்ப், "உங்கள் எண்ணெயை நீங்களே தேடிக்கொள்ளுங்கள்" என சாடினார். இதற்கு பதிலளித்த ஸ்டார்மர், பிரிட்டனின் தேசிய நலன் சார்ந்தே முடிவுகள் எடுக்கப்படும் என்று கூறினார். உலகின் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெய் விநியோகம் ஹார்முஸ் நீரிணை வழியாகவே நடக்கிறது. ஈரான் இந்த பாதையை முடக்கியுள்ளதால், உலகளவில் எரிபொருள் விலை உயர்ந்து பணவீக்கம் அதிகரித்துள்ளது. இதனை சீர்செய்ய ராணுவ ரீதியிலான திட்டங்களையும் வகுக்க இந்த 35 நாடுகள் முடிவு செய்துள்ளன.

# ஆலங்குளம் காங்கிரஸ் கமிட்டி நகர தலைவர் வில்லியம் தாமஸ் 63வது பிறந்த நாள் விழா

தென்காசி

ஆலங்குளம் காங்கிரஸ் கமிட்டி நகர தலைவர் வில்லியம் தாமஸ் அவரது 63 வது பிறந்த நாள் விழா வெகு விமர்சியாக நடைபெற்றது. இவ்விழா நகர காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில் வில்லியம் தாமஸ் நண்பர்கள் முன்னிலையில் கேச் வெட்டி கொண்டாடப் பட்டது. இவ்விழாவில் ஆலங்குளம் நகர திமுக செயலாளர் எஸ்பிடி நெல்சன், பாரத் ஸ்கேன் நிறுவனர் டாக்டர் இம்மானுவேல், வழக்கறிஞர் பிரிவு மாநில துணைத்தலைவர் பால்ராஜ், ஆலங்குளம் நகர துணை தலைவர் லிவிஸ்டன் விமல் அருணாசலம், வழக்கறிஞர்



கருப்பசித்தன், காங்கிரஸ் ஒபிசி அணி ஞான பிரகாஷ், முன்னாள் ஆசிரியர் சாலமோன் , திமுக கணேசன், சத்திரியர் சான்றோர் படை மாவட்ட தலைவர் அலெக்ஸ், பாஜக நிர்வாகி வி ஜி எஸ் கணேசன், மாசாமி ஐகோர்ட் ராஜா தமிழ் மணி பொன்னுதுரை, ஆட்டோ சேகர் அந்தோணி அமல்ராஜ், முன்னாள் காவால் உதவி ஆய்வாளர்கள் அர்ச்சுணன், பேச்சி முத்து, மேகநாதன், பிரதாப், கணேசன் மாடசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்,

# ஆலங்குளம் தொகுதியில் நிச்சயம் வெற்றி பெறுவேன் சுயேட்சையாக போட்டியிடும் டாக்டர் இம்மானுவேல் பேட்டி

தென்காசி

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் வேட்பாளராக போட்டியிட பாரத் ஸ்கேன் நிறுவனர் டாக்டர் இம்மானுவேல் விருப்ப மனு அளித்திருந்தார். நேர் காணலிலும் பங்கேற்ற அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்படவில்லை. இந்நிலையில் அவர் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். இது குறித்து அவர் நிருபர்களிடம் கூறியதாவது: ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பூலாங்குளம் கிராமம் எனது சொந்த ஊராகும். கிராமத்தில் பிறந்த வளர்ந்த நான் இன்று மருத்துவராகி மக்கள் சேவை செய்து வருகிறேன். என்னை போல் என் தொகுதி மக்களும் வளர்ச்சி பெற வேண்டும் என்ற எண்ணம் கொண்டவன் நான். இதனாலேயே கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக எனது சொந்த செலவில் பல்வேறு மக்கள் நலப்பணிகளை செய்து வருகிறேன்.குறிப்பாக நான்




நடத்திய 10 பிரமாண்ட இலவச கண் பரிசோதனை மற்றும் கண் அறுவை சிகிச்சை முகாம் மூலம் பல்லாயிரணக்கான ஏழை, எளிய மக்கள் பயன்பெற்றுள்ளனர். 1000க்கும் மேற்பட்டோருக்கு கண்ணொளி கிடைத்துள்ளது. மக்களோடு மக்களாக நெருங்கி பழகி வருவதால் தொகுதி மக்களிடம் நம்ம டாக்டர் இம்மானுவேல் என்ற நற்பெயரை பெற்றுள்ளேன். இன்னும் பல நல்ல திட்டங்களை கொண்டு வந்து என் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவே சட்டமன்ற தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடவுள்ளேன். மக்களை நம்பியே நான் போட்டியிடுகிறேன். எந்த கட்சியை சாராமல் வாக்கு கேட்டு செல்வதால் அனைத்து தரப்பு மக்களும் எனக்கு வாக்களிப்பர்கள் தொகுதி மக்கள் என்னை விரும்புகின்றனர். எனது சேவைக்கு அங்கீகாரம் அளிக்கின்றனர். நம்ம டாக்டர் வேண்டு;ம் என்கின்றனர். மக்களின் தீர்ப்பு மகேசன் தீர்ப்பு. ஆதலால் எனக்கு வெற்றி வாய்ப்பு அதிகம் உள்ளது. நிச்சயம் வெற்றியும் பெறுவேன் இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழ்நாடு சட்டசபை பொது தேர்தலில் அதிமுக கூட்டணிக்கு தேவேந்திர பேனாக்கள் இயக்கம் ஆதரவு

சென்னை

தமிழ்நாடு 2026 சட்டசபை பொது தேர்தலில் அதிமுக கூட்டணிக்கு தேவேந்திர பேனாக்கள் இயக்கம் ஆதரவு. தேவேந்திர பேனாக்கள் இயக்கத்தின் தலைவர்,பச்சைத் தேவேந்திரர், வழக்கறிஞர் டி.சி பாலசுந்தரம் சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள வீட்டில் அ.இ.அ.தி.மு.க வின் பொதுச் செயலாளர் எடப்பாடியாரை சந்தித்து ஆதரவு கடிதம் வழங்கினர் பின்னர் டிசி பாலசுந்தரம் பேசும் போது வன்முறையற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்கும் ,வளமான நாட்டை வளர்த்தெடுப்பதற்கும் எங்கள் தேவேந்திர பேனாக்கள் இயக்கம் அறிவாயுதம் ஏந்தி மக்கள் பணி செய்து வருகிறது தமிழகத்தில் சில ஆண்டுகளாக சட்டம்,ஒழுங்கு சீர்குலைந்து எங்கள் தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்கள் நாற்றுக் கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் இந்த நிலை நீடித்தால் நாங்கள் அச்சத்தில் சுதந்திரமற்றுதான் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகி விடும்,அதனால் ஆட்சி மாற்றம் தேவை என்று வருகின்ற சட்டமன்ற



தேர்தலில் அதிமுக கூட்டணிக்கு ஆதரவு கொடுக்கிறது. உதவி பாவாணர் அவர்களை கௌரவிக்கும் வகையில் தஞ்சை தமிழ் பல்கலை கழகத்திற்கு ""தேவநேயப் பாவாணர் தமிழ் பல்கலைக் கழகம்""என்று பெயர் சூட்ட வேண்டும்.மேலும் மாவட்டங்களில் உள்ள மாவட்ட தலைமை நூலகங்களுக்கு தேவநேயப் பாவாணர் நூலகம் என பெயர் சூட்ட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன் வைத்தார்,

# சென்னையில் ஆட்டோவை திருடி காட்பாடி டாஸ்மாக் கடையை உடைத்து கொள்ளை முயற்சி செய்த வாலிபர் கைது

## புகார் அளித்த 4 மணி நேரத்தில் தட்டி தூக்கிய தனிப்படை போலீசார்

காட்பாடி

வேலூர் காட்பாடி காவல் எல்லைக்குட்பட்ட அருப்பு மேடு பகுதியில் உள்ள டாஸ்மாக் கடையின் பூட்டை உடைத்து கொள்ளை முயற்சியில் ஈடுபட முயன்ற வாலிபர் கைது. காட்பாடி போலீசார் மற்றும் தனிப்படை போலீசார் சிசிடிவி காட்சிகளை வைத்து பிடித்த நபரை காவல் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை நடத்தியதில், அவர் சென்னை செங்குன்றம் பகுதியை சேர்ந்த தினேஷ் (21) என்பது தெரியவந்தது. மேலும் விசாரணையில் கைதான தினேஷ் சென்னையில் ஒரு ஆட்டோவை திருடிக்கொண்டு, அதன் மூலம் வேலூருக்கு



வந்துள்ளார். அந்த ஆட்டோவை பயன்படுத்தியே காட்பாடியில் உள்ள மதுபான கடையை நள்ளிரவில் உடைத்து திருட முயற்சி செய்துள்ளார். இவர் மீது ஏற்கனவே பல்வேறு மாவட்டங்களில் திருட்டு வழக்குகள் நிலுவையில் இருப்பதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இச்சம்பவம் குறித்து காட்பாடி காவல் ஆய்வாளர் தயாளன், உத்தரவின் பேரில் காவல் உதவி ஆய்வாளர் மணிகண்டன், வழக்குப்பதிவு செய்து, பாரதிய நியாய சன்ஹிதா (BNS) சட்டப்பிரிவுகள் 331 மற்றும் 62 ஆகியவற்றின் கீழ் தினேஷை கைது செய்தனர். அவரிடமிருந்த ஆட்டோ பறிமுதல் செய்யப்பட்டது. தொடர்ந்து அவரிடம் தீவிர விசாரணை மேற்கொண்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தனர்.



2026 ஆலங்குளம் சட்டமன்ற தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் K.RP பிராபாகரன் தெற்கு காவலா குறிச்சி கிராமத்திற்கு வருகை அமமுக ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது இந் நிகழ்வில் அமமுக ஒன்றிய செயலாளர் முருகன், நகர செயலாளர் எம் எஸ் சுப்பையா, அதிமுக நகர செயலாளர் KPS சுப்பிரமணியன், பாஜக ஒன்றிய தலைவர் குமரகுருபரன் காவலாகுறிச்சி வெள்ளத்துரை, ஆலங்குளம் கேபி எஸ் குமரன், அ.ம மு க மாவட்ட துணைத தலைவர் சிவக்குமார் வேளாங்கன்னி ரெட்டியார்பட்டி கபிலன், மாலையப்பன், மருதபுரம் சின்னத்துரை, கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் தவெக வேட்பாளர் விபின் சக்கவார்த்திக்கு உற்சாக வரவேற்பு

ஆலங்குளம்

தமிழ்நாடு 2026 சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு அனைத்து கட்சிகளும் தங்களது வேட்பாளர்களை அறிவித்து வரும் நிலையில் தவெக தலைவர் விஜய் நேற்று முன்தினம் 234 தொகுதிக்கான வேட்பாளர்களை அறிவித்தார். அதன்பேரில் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் விபின் சக்கவர்த்தி என்பவரை வேட்பாளராக அறிவித்து அதற்கான சான்றிதழை வழங்கினார் இந்நிலையில் விபின் சக்கரவர்த்தி சென்னையிலிருந்து ரயில் மூலம் திருநெல்வேலி வந்து அங்கிருந்து கார் மூலம் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்கு வருகை புரிந்தார். அவருக்கு மாறந்தையில் தவெக தொண்டர்கள்



பொன்னாடை அணிவித்து வரவேற்றனர். பின்னர் அங்குள்ள இசக்கியம்மன் கோவிலில் பூஜை செய்து அங்கிருந்து ஆலங்குளம் வருகை புரிந்தார். அங்குள்ள காமராஜர் சிலை முன்பு விபின் சக்கரவர்த்திக்கு கழக நிர்வாகிகள் மேளதாளம் முழங்க உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்பு அங்குள்ள பெருந்தலைவர் காமராஜர் திருவுச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனை யெடுத்து கட்சி நிர்வாகிகளுடன் பல்வேறு தேர்தல் ஆலோசனைகளை நடத்தினார். இதில் ஏராளமான தவெக நிர்வாகிகள் தொண்டர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்

## பெரியகுளம் அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில்

# பங்குனி உத்திர தேர்த்திருவிழா முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன் மற்றும் தலைவர்

## ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வடம் பிடித்து திருத்தேர் இழுத்தர்கள்

தேனி

தேனி மாவட்டம் பெரியகுளம் தென்கரை வராக நதியின் அமைந்துள்ள அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. இந்த கோவிலில் அருள்மிகு பாலசுப்பிரமணியர், ராஜேந்திர சோழீஸ்வரர், அறம் வளர்த்த நாயகி அம்மன் என ஒவ்வொருவருக்கும் தனித்தனியே கொடிமரம் உள்ளது விசேஷமானது. இது மாதிரியான அமைப்புகள் சில கோவில்களில் மட்டுமே உண்டு. இந்த கோவிலில் வருடம் தோறும் நடைபெறும் பங்குனி உத்திர தேர்த்திருவிழா மார்ச் 23 ல் கொடியேற்றத்துடன் துவங்கி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். ஒன்பதாம் நாள் திருவிழாவான தேரோட்டம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இன்று திருத்தேரோட்டம் நடைபெற்றது. தேரோட்டத்தில் பெரிய தேரில் அறம் வளர்த்த நாயகி உடனுறை ராஜேந்திர சோழீஸ்வரர் உற்சவ மூர்த்தியாக சோமாஸ் கந்தர் பெரிய தேரில் எழுந்தருளினார். சிறிய சப்பரத்தில், அம்மன்,



விநாயகர் சண்டிகேஸ்வரர் உடன் எழுந்து அருளினார். இன்னொரு சிறிய சப்பரத்தில் சுப்பிரமணிய சுவாமி வள்ளி தெய்வானையுடன் எழுந்தருளினார். திருத்தேர் வடத்தினை முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், விடுதலை சிறுத்தை கட்சியின் வேட்பாளர் ஆற்றலரசு, பெரியகுளம் நகர்மன்ற தலைவர் சுமிதா சிவகுமார் மற்றும் பெரியகுளம் பகுதியில் இருந்து ஏராளமான பக்தர்கள் திருத்தேர் வடம்பிடித்து இழுத்தனர். இந்த திருத்தேர் கச்சேரி சாலை வழியாக புறப்பட்டு தெற்கு ரத வீதி, திருவள்ளுவர் சிலை, கச்சேரி ரோடு, வழியாக சென்று மீண்டும் நிலை அடைந்தது. இந்த திருத்தேரோட்டத்தினை காண பெரியகுளம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்திருந்து திருத்தேரோட்டத்தில் கண்டு சுவாமி தரிசனம் செய்தனர். இதில் துணை கண்காணிப்பாளர் நல்லு தலைமையில் காவல்துறை யினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி பவானி வட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சியில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை துவக்கி வைத்தார். உடன் திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி.பிரியா,பவானிநகராட்சி ஆணையர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டார்கள்

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CALL: 044-22772026,9443699066